A/L இல்
விஞ்ஞான
வகுப்புக்கள்
Im, IIm பிரிவுகள்
நடைபெறுகின்றன
IIIm பிரிவு
ஆரம்பமாகின்றது
விபரங்கட்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ.1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

யாழ்நகரில்
தரமான
A/L
விஞ்ஞானக் கல்விக்கு
என்றும்
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஆனி மீ 23 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வால் பிறை 28 (07 07 1986) UTHAYAN- A LIVELY TAMIL DAILY கதிர்:- 197

# வடக்கும் கிழக்கும் இணையாத திட்டத்தை பரிசீலிக்க தயாரில்லை

## போராளிகள் அமைப்புகள் எம். ஜி. ஆருக்கு அறிவித்தன

சென்னை, ஜூலை 6

வடக்கும், கிழக்கும் இணையாத எந்த அமைப்பை யாவது உருவாக்கும் திட்டம் எதனையும் நாம் பரிசீலனை செய்யத் தயாராக இல்லை.

இவ்வாறு விடுதலைப் போராளிகள் அமைப்புகள் ஐந்தும் தமிழக முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச் சந்திரனிடம் திட்டவட்டமாக அறிவித்து விட்டன.

இலங்கை அரசின் மாகாண சபை யோசனைகளை சமர்ப்பித்த பின்னர் ஐந்து தமிழ்ப் போராளி அமைப்புகளும் கடந்தவாரம் முதலமைச்சரைச் சந்தித்துப் பேசின.

போராளிகளின் இக் கருத்துக்களை எழுத்தில் தந்தால் இந்திய அரசிடம் இதைச் சமர்ப்பித்துக் கூற முடியும் என்று முதலமைச்சர் இராமச் சந்திரன் அமைப்புக்களின் தலைவர்களிடம் தெரிவித்தார்.

முதலமைச்சரைக் கூட்டாகச் சந்தித்த போராளித் தமிழ் அமைப்புக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 134 பேர் பூஸாவிலிருந்து விடுதலையாவர்

திருகோணமலை, ஜூலை 7

திருகோணமலை நகரில் கைதாகி பூஸாவுக்குக் கொண்டு போகப்பட்ட 497 பேரில் மாணவர் உட்பட 134 பேர் இன்று விடுதலை செய்யப் படுவர் என்று திருமலை பிரசைகள் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் இவர்கள் கப்பல் மூலமோ காலியில் இருந்து திருமலைக்கு கொண்டு வரப்படுவர் என்று தெரிகிறது.

(உ-எ-150)

முச்சந்திமுரளி



அப்ப, தமிழ் அரசாங்க ஊழியர்மாரின்ரை கதிரையளில, இரண்டொரு நாளையில அரசாங்கப் பந்தங்கள் வந்து இருக்கும் எண்டு கூசாமல் சொல்லலாம். பின்னை!

# வேலைக்குத் திரும்பாதவர் இடங்களுக்கு திருமலையிலும் வவுனியாவிலும் புதிய அரச ஊழியர்கள்

## நியமன அதிகாரம் இணைப்பு அதிகாரிகளுக்கு

கொழும்பு, ஜூலை 7

வவுனியா, திருகோணமலை மாவட்டங்களில் உள்ள அரச அலுவலகங்களில் வேலைக்குத் திரும்பாத ஊழியர்களின் இடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்படுவர்.

அதற்கான அதிகாரத்தை ஜனாதிபதி ஜெயவர்த்தனா அந்த இரண்டு மாவட்டங்களின் இணைப்பு அதிகாரிகளுக்கும் வழங்கியிருக்கின்றார்.

இந்த இரண்டு மாவட்டங்களிலும் சிவில் நிர்வாகம் ஸ்தம்பிதம் அடையாமல் இருப்பதை உறுதி செய்யும் முகமாகவே ஜனாதிபதி புதிய ஊழியர் நியமனத்தைச் செய்ய இணைப்பதிகாரிகளுக்கு இந்த அதிகாரத்தை வழங்கியிருக்கிறார் என்று அரசாங்க வட்டாரங்கள் விளக்கம் தந்தன. (உ-எ-2)

## போராளிகள் தலைவர்களும் புதுடில்லி செல்வரா?

சென்னை ஜூலை 7

விடுதலைப் போராளிகள் அமைப்புக்களின் தலைவர்கள் அனேகமாக இன்று திங்கட்கிழமை அளவில் புதுடில்லி செல்லக்கூடும்.

இப்படி ஏ. எப். பி செய்தி ஸ்தாபனம் சென்னையில் இருந்து அறிவித்தது.

புதுடில்லியில் இந்திய அரசு அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தவே இவர்கள் செல்வர் என்று அச்செய்தி மேலும் கூறியது.

தமிழர் விடுதலைக் கூட்டணியும், சகல போராளிகள் அமைப்புக்களும் இலங்கை அரசின் யோசனைகள் குறித்து "இணங்கவும் முடியாத— நிராகரிக்கவும் முடியாத" நிலையில்தான் புதுடில்லி விஜயத்தை மேற்கொள்வதாக ஏ. எப். பி செய்தி ஸ்தாபனம் மேலும் அறிவித்தது. (அ-எ-2)

அ. க. மாநாடு

## கூட்டணியின் தலைவர்களிடம் முடிவு எடுக்கும் அதிகாரம்

சென்னை, ஜூலை 6

இலங்கை அரசினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மாகாண சபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் அரசியல் கட்சி மாநாட்டில் தமிழர் கூட்டணி பங்குபற்றுமா?

இதுதொடர்பாக தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் நிலையைத் தீர்மானிக்கும் அதிகாரம் அதன் மூத்த தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

கூட்டணியின் அரசி (4 ஆம் பக்கம் பார்க்க)

## திம்புத் திட்டத்தின் அடிப்படையிலேயே பேச்சு நடக்க வேண்டுமாம்

சென்னை, ஜூலை 6

திம்பு மாநாட்டில் சமர்ப்பித்த அடிப்படைத் திட்டங்களின் அடிப்படையிலேயே இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்கள் நடைபெற வேண்டும்.

இவ்வாறு ஐந்து விடுதலைப் போராளிகள் அமைப்புக்களும் தீர்மானித்துள்ளதாக ஏ. எப். பி செய்தி ஸ்தாபனம் சென்னையில் இருந்து செய்தி வெளியிட்டுள்ளது.

சென்னைத் தமிழ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏ. எப். பி இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

திம்பு மாநாட்டில் தமி (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாஸ் எடுத்த பஸ்கள் சென்றன

ஆனையிறவைத் தாண்டுவதற்கு அனுமதிப் பத்திரம் (பாஸ்) எடுத்த பஸ்கள், நேற்று கொழும்பு சென்றன. (உ - 10)

## இந்திய மீனவர்கள் கொலை: தூதுவர் டிக்ஷிற் இன்று இலங்கையிடம் ஆட்சேபம் தெரிவிப்பார்

யாழ்ப்பாணம், ஜூலை 7

இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் 9 இந்திய மீனவர் விவகாரம் தொடர்பாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஷிற் இலங்கை வெளியுறவு அமைச்சு அதிகாரிகளை உத்தியோக பூர்வமாக இன்று திங்கட்கிழமை சந்தித்து ஆட்சேபம் தெரிவிப்பார்.

இப்படி இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியத் தூதரகத்தின் வேண்டுகோளின் மீது, தூதரக சட்ட ஆலோசகர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம், உயிர் தப்பிய இந்திய மீனவர் வேலுத்தேவன் கணபதியின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்தார்.

இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே இந்தியத் தூதர், இலங்கை வெளியுறவு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார்.

அப்படி ஒரு சம்பவம் இடம்பெற்றதாகத் தங்களுக்குத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் நேற்றுத் தெரிவித்தன.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் உயிர் தப்பி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மல்வத்தைதேரர் மகாசங்க கூட்டத்தில் பங்குபற்ற மறுப்பு

கொழும்பு, ஜூலை 7

மாகாணசபை யோசனைகளை ஆராயும் மகாசங்கக் கூட்டத்தில் மல்வத்தை மகாநாயக்க தேரர் கலந்து கொள்ள மறுத்துவிட்டார்.

அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பான சந்தானந்த மகாநாயக்க தேரர் அழைத்துள்ள இந்த மாநாடு இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது.

1984 சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்ட பௌத்த மத குருமார்கள் உட்பட மகாசங்கத்தினர் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்வர்.

மல்வத்தை பீடாதிபதி சிரிமல்வத்தை ஆனந்த தேரரும் கலந்து கொள்ளும்படி அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ளமுடியாது இருப்பதாக மல்வத்தை பீடாதிபதி அறிவித்துள்ளார். (உ-எ)

### சுபநேரம்

07-07-1986
திங்கட்கிழமை

சுபநேரம்:-
11 58 முதல் 1 28 வரை
ராகுகாலம்:-
7 28 முதல் 8 58 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## மாங்கேணி முகாம் மீது 4 மணி நேர தாக்குதல்

மட்டக்களப்பு, ஜூலை 7

மட்டக்களப்பு மாங்கேணி இராணுவ முகாம் மீது போராளிகள் 4 மணி நேரமாகத் தாக்குதல் நடத்தினர்.

சனிக்கிழமை நள்ளிரவு முதல் ஞாயிறு அதிகாலை வரை நடந்த பலத்த மோதல் பற்றிக் கூறப்படுவதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடல் ஓரமாக தனியார் கட்டடத்தில் மாங்கேணி இராணுவ முகாம் உள்ளது.

தமிழ்ப் போராளிகள் இம் முகாம் மீதான தாக்குதலை நள்ளிரவு 12 30 மணி அளவில் தொடுத்தனர். 4 மணி நேரம் தாக்குதல் நீடித்தது.

ரொக்கட் லோஞ்சர்கள் மற்றும் நவீன ஆயுதங்களுடன் போராளிகள் தாக்கினர்.

பாலம் தகர்ப்பு

வாகரை, கதிரவெளி ஆயுதப்படை முகாம்களில் இருந்து உதவிக்கு சிப்பாய்கள் வருவதைத் தடுக்க போராளிகள் பனிச்சங்கேணி பாலத்தைத் தகர்த்தனர். அதனால் அம்முகாம்களில் இருந்து சிப்பாய்கள் வர முடியாது போயிற்று.

அதுபோன்று வாகனேரி முகாமில் இருந்து சிப்பாய்கள் வரமுடியாத (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெகஜீவன் மறைவு: 3 நாள் துக்கதினம் மத்திய அரசு அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 7

இந்தியாவின் முன்னாள் துணைப் பிரதமரும் காங்கிரஸ் (ஜெ) தலைவருமான டாபுஜி ஜெகஜீவன் ராம் நேற்று காலமானதையடுத்து இந்தியஅரசு மூன்று நாள் துக்க தினம் அறிவித்திருக்கிறது.

புதுடில்லியில் பெருந்திரளான மக்கள் கூடி நின்று பாபுஜிக்கு இறுதி அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

நாளை மாலை நடைபெறும் மரணச்சடங்குகளில் இந்திய அரசின் சார்பில் பிரதமர் ராஜீவ் காந்தியும், ஜனாதிபதி ஜெயில்சிங்கும் பங்குபற்றுவார்கள்.

(மற்றொரு செய்தி மூன்றாம் பக்கத்தில்) (உ)

## படுவான்கரையில் ஹெலித் தாக்குதல் குடிசையும் வானும் எரிந்தன

மட்டக்களப்பு, ஜூலை 7

மட்டக்களப்பு படுவான்கரைப் பகுதியில் ஹெலிகொப்டரில் இருந்து நடத்தப்பட்ட ரொக்கட் லோஞ்சர் தாக்குதலில் ஒரு குடிசையும் வான் ஒன்றும் தீக்கிரையாகின.

கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது.

கொட்டியாப்புளி என்ற இடத்திற்கு மேலாக ஹெலிக்கொப்டர் ஒன்று பறந்து சென்ற சமயம் ஒரு குடிசையின் அருகே சிலர் நடமாடுவதை அதில் சென்றவர்கள் கண்டதாகக் கூறப்படுகிறது.

தாழ்வாகப் பறந்து நோட்டம் இட எத்தனித்த சமயம் கீழ் இருந்து ஹெலிக்கொப்டர்மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து திரும்பிச்சென்ற ஹெலிக்கொப்டர் மீண்டும் வந்து அந்தக் குடிசை, அருகிலிருந்த வான் ஆகியவை மீது சுட்டது (உ-எ 21)

## கடைசி படகும் பறிபோனது

கொழும்பு, ஜூலை 7

சுண்டிக்குளத் திலிருந்த கடைசி ரோந்துப் படகையும் கடற்படை பொறுப்பு ஏற்றது. (உ-எ-2)

இப்போது சுண்டிக்குளத்திலும் ரோந்துப் படகு இல்லாததினால் கள்ளக் கடத்தல் தடுப்பு நடவடிக்கை எடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

## பிலிப்பீன்ஸில் மற்றொரு அரசு ஹோட்டலில் பிரகடனம்

மணிலா, ஜூலை 6

பிலிப்பீன்ஸிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் அதிபர் மார்க்கோஸுக்கு ஆதரவான துருப்புக்கள் தலைநகர் மணிலாவின் பிரதான ஹோட்டல் ஒன்றை கைப்பற்றி தம்வசம் வைத்துக்கொண்டு புதிய அரசு ஒன்றை அறிவித்திருக்கிறார்கள்.

75 வயதான சட்டத்தரணி ஆர்சுரோ ரொலன்றினோ தர்மை உதவி ஜனாதிபதியாக அறிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி மார்க்கோஸ் நாடு திரும்பும் வரை தாம் அவருக்குப் பதிலாக செயல்படப் போவதாகவும் அவர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதி

கொழும்பு ஜூலை 7

மூன்றுநாள் அமளியின் பின்னர் பூண்டுலோயாவில் நேற்று அமைதி நிலவியது

# 'கொப்ரு' ஹெலிகளை வாங்கவே லலித் அமெரிக்கா சென்றார்

## அவசர விஜயத்தின் மர்மம்

கொழும்பு, ஜூலை 7

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி திடீர் அமெரிக்க விஜயத்தை எதற்காக மேற்கொண்டார்?

இதுபற்றிய உள் ரகசியங்கள் தற்போது வெளி வந்துள்ளன.

துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட 'கொப்ரு' ரக ஹெலிக்கொப்டர்களை அமெரிக்காவிடம் இருந்து வாங்குவது சம்பந்தமான பேச்சுக்களை நடத்தவே அமைச்சர் அத்துலத் முதலி அமெரிக்கா சென்றிருந்தார்—

இப்படி லண்டனில் இருந்து வெளிவரும் 'பார் ஈஸ்டர்ன் இகனொமிக் ரிவியூ' என்ற சஞ்சிகை செய்தி வெளியிட்டது.

இலங்கை அரசு, அமெரிக்காவிடம் இருந்து 'கொப்ரு' ரக ஹெலிக்கொப்டர்களை வாங்குவதற்கு நீண்ட காலமாக முயற்சித்து வருகிறது. அமெரிக்காவோ அதனை விற்பதற்கு இழுத்தடித்து வருகின்றது.

இதேரக ஹெலிக்கொப்டர்களை சவூதி அரேபியாவுக்கு விற்பதற்கு அமெரிக்க அரசு பெரும் பிரயத்தனத்தின் (4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி

# புதிய பிரசைகள் குழு

## தெரிவுக் கூட்டம்

### 9ஆம் திகதி நடக்கும்

கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சி பிரசைகள் குழுவின்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கலைக்கப்பட்டதனைத் தொடர்ந்து மீண்டும் புதிய நிர்வாகசபை ஒன்றைத் தெரிவது தொடர்பான கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி காலை 9 மணிக்கு உருத்திரபுரம் குருகுலத்தில் நடைபெற இருக்கிறது.

கிளிநொச்சியில் இன்று பிரசைகள் குழுவின் சேவை முக்கியமாக உள்ளதால் புதிய செயற்குழு ஒன்றை உடனடியாகத் தெரிவு செய்யவேண்டியுள்ளது.

ஆகவே 9ஆம் திகதி குருகுலத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி பிரசைகள் குழுவைத் தெரிவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-76)

### வியாபாரிமூலைப் பகுதியில்

## கட்டாக்காலி நாய் உங்களைக் கடித்ததா?

### உடன் ஆஸ்பத்திரிக்கு விரையுங்கள்

பருத்தித்துறை, ஜூலை 7

பருத்தித்துறை வியாபாரிமூலைப் பகுதியிலுள்ள கட்டாக்காலி நாய்களுக்கு விசர் நோய் ஏற்பட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் சேவை தடைபெற்றதால் இப்பகுதியில் நாய்களுக்கு விரைவாக விசர்நோய் பரவி வருகிறது.

தற்பொழுது நிலவும் வறட்சிக் காலநிலையாலும் அடிக்கடி கடலில் இருந்து தீர்க்கப்படும் பீரங்கிக் குண்டு வெடிப்புச் சத்தங்களாலும் நாய்கள் கட்டாக்காலியாக வீதிவழியே திரிகின்றன.

கடந்த வாரம் வியாபாரி மூலையிலே விசர் நோயினால் பீடிக்கப்பட்ட நாய் ஒன்று ஒரே நாளில் 12 மனிதர்களைக் கடித்துள்ளதென பருத்தித்துறை மாவட்ட சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

இவர்களில் சிலர் மாத்திரமே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஏனையவர்கள் உடனடியாக அண்மையிலுள்ள ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு நிலையத்திலோ அல்லது வைத்தியசாலையிலோ சென்று சிகிச்சை பெறுமாறு கேட்கப்பட்டிருக்கிறது. (உ-118)

### மண்டைதீவில்

## வதந்திகளால் மக்கள் வெளியேறினர்

மண்டைதீவு, ஜூலை 7

மண்டைதீவுப் பகுதியில் சிலர் வதந்திகளைப் பரப்புவதால் இப்பகுதி மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேற முயலுகின்றார்கள்.

சிப்பாய்கள் கிராமப் பகுதிகளுக்கு சோதனைக்கு வரப்போகின்றார்கள் என்று சிலர் சமீபத்தில் வதந்திகளைப் பரப்பினர். இதனால் மக்கள் பயத்தால் வெளியேறினர். சிலர் கோவில்களில் தஞ்சம் அடைந்தனர்.

பின்பு வதந்தி என்று தெரியவந்ததும் மீண்டும் தங்கள் இருப்பிடங்களுக்கு மக்கள் திரும்பினார்கள். (இ 88)

### வாங்கவும் விற்கவும்

**அரசியல் புத்தகம்**

அரசியலில் ஈடுபாடு கொண்டவர்களுக்கான சிறந்த புத்தகம் இலங்கையின் அரசியல் திட்டங்கள் (1833 தொடக்கம் 1978 வரை ஆசிரியர்; அம்பலவாணர் சிவராசா B. A. (Hons) M.A. (Canada) அரசறிவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் - பேராதனைப் பல்கலைக்கழகம்; பல்கலைக்கழக புகுமுக மாணவர்களும் பட்டதாரி மாணவர்களும் கேட்டதற்கமைய இரண்டாம் பதிப்பாக வெளிவந்து விற்பனையாகின்றது. விலை ரூ. 27/50 பதிபாளர் சிவா பிறிண்டேர்ஸ், கைதடி.

**நொத்தாரிசுமாருக்கு**

உறுதிஎழுத்தாளர்களுக்கு (நொத்தாரிசுமார) தேவையான அறுதி நன்கொடை சீதனம், ஈடு ஆகிய பத்திரங்கள் லெஜர் பேப்பரில் அச்சிடப்பட்டு விற்பனையாகின்றது. எந்நேரமும் பெறலாம். 100 செட்டின் விலை ரூபா 225/- (100x3) சிவா பிறின்டேர்ஸ், மெயின் வீதி, கைதடி (யாழ் வளாக சித்த மருத்துவ பீடத்துக்கு அண்மையில்)

**தேவை**

எம்மிடம் டாக்டர் எஞ்சினியர், M.Sc. மணமகனுக்கும் செவ்வாய்க் குற்றமுள்ள பாமலிட்ஸ் பெண்ணுக்கும் மணமக்கள் தேவை புதன் 9 மணி 12 வரை சந்திக்கவும் ஸ்ரீமாவை விநாயகர் மங்கள ஏஜன்சி 52/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

### காங்கேசன்

## முருகன் ஆலயம் மீண்டும் திறக்கப்பட்டு

### வெள்ளி தோறும் பூசை

காங்கேசன்துறை, ஜூலை 7

ஆறுமாத காலமாகப் பூட்டப்பட்டிருந்த காங்கேசன்துறை முருகன் ஆலயம் திறக்கப்பட்டு வெள்ளிதோறும் பூசை நடக்க ஏற்பாடாகியுள்ளது.

காங்கேசன்துறை பழைய ஆஸ்பத்திரிக் கட்டடத்தில் பொலீஸ் கமோண்டோப்பிரிவு ஏற்படுத்தப்பட்ட போது அந்தவளவில் இருந்த முருகன் ஆலயத்துக்கும் மூடுவிழா நடந்து பூசைகள் எதுவும் இல்லாது இருந்தது.

இதையடுத்து இப்பகுதிப் பொதுமக்கள் எடுத்த முயற்சியை அடுத்து மேற்படி ஆலயம் திறக்கப்பட்டு பிரதி வெள்ளிதோறும் பூசைகள் நடக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி முதன்முதலாக ஆலயம் திறக்கப்பட்டு பிராயச்சித்தம் நடந்த விசேட பூசைகள் நடைபெற்றன.

அப்பூஜையின் போது பொலீஸ் கமாண்டோ உதவிப் பொலீஸ் அதிபர் திரு பிலப்பிட்டியா, பாதுகாப்புப்படை கூட்டுத்தளபதி திரு. டபிள்யூ. பி. வே. விஜயசிங்கா ஆகியோர் உட்பட பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

விசேட பூசைகளை அடுத்து காளாஞ்சி வழங்கப்பட்டு பிரசாதமும் வழங்கப்பட்டது (இ-68)

### ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 7

எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவிருந்த 5 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை தற்போதைய சூழ்நிலை காரணமாக ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு தபால் சேவை ஸ்தம்பிதம், தபால் மூலம் பார்சல் அனுப்ப முடியாத சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே இப்பரீட்சை பின் போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் க. பொ. த உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலத்தில் மேற்படி பரீட்சையை நடத்துவதால் தபால் சேவை ஸ்தம்பிதம், பார்சல் அனுப்புவதில் எதிர்நோக்கும் சிக்கல்கள் ஆகியவை தவிர்க்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-21)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## சமாதானம் என்பது வெறும் போர் நிறுத்தம் அல்ல

### உடுவில் பரிசளிப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 7

சமாதானம் என்பது வெறுமனே போர் நிறுத்தல் அல்ல. குண்டு வெடிப்புச் சத்தங்கள் இல்லாத சூழ்நிலை மட்டும் அல்ல. அதற்கு மேலாக நீதியும் சுதந்திரமும் சகோதரத்துவமும் நிலவும் சூழலே உண்மையான சமாதானமாக அமைய முடியும்.

உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பாடசாலை ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கல்லூரி அதிபர் செல்வி சி. வி. செல்லையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ் ஆயர் வண பிதா கலாநிதி. பி. தியோகுப்பிள்ளை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு அருளுரை வழங்கினார்:

முன்னாள் அதிபர் திருமதி. ஜே. டி. செல்லையா திறமையான மாணவிகளுக்குப் பரிசுகளை வழங்கினார்.

பிரதம பிரிவைச் சார்ந்த மாணவிகள் வரவேற்புரை கூறினார்கள்.

கல்லூரி அதிபர் செல்வி செல்லையா தனது ஆண்டறிக்கையில் தொடர்ந்து கூறியதாவது.—

சமாதானம் என்ற உணர்வை வளர்க்கும் பொறுப்பை தனியாக அரசியல் தலைவர்களிடம் விடக்கூடாது ஆசிரியர்களுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு.

சமுதாயத்தில் நிலவும் அநீதி, வன்செயல் ஆகியவை குழந்தைகளின் ஆளுமை விருத்தியையும் பாதிக்கும்.

இதனால் ஆசிரியர்களின் கடமையில் இடர்ப்பாடு ஏற்படுகிறது

—இவ்வாறு செல்வி செல்லையா தொடர்ந்து கூறினார்.

செல்வி திலாந்தி இராஜு நன்றி கூறினார். (இ 9)

### கல்விப் பொருட்காட்சி

சாவகச்சேரி, ஜூலை 7

மட்டுவில் சந்திரபுரம் சந்தவரோதய மகா வித்தியாலய கலை, கைப்பணி, விஞ்ஞானப் பொருட்காட்சிகள் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றன.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார் (அ)

### வயாவிளான் உத்தரிய மாதா திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 7

வயாவிளான் உத்தரிய மாதா கோவில் திருநாட் கொண்டாட்டங்கள் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன.

அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்களால் இக்கோயில் பங்கைச் சேர்ந்த பல குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

அயல் கிராமங்களில் சென்று குடியேறிய இவர்கள் திருநாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அதனை எளிமையான முறையில் கொண்டாடும்படி பங்குத்தந்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

தினமும் பி. ப. 5மணிக்கு நவநாட் பூசைகள் நடைபெறும். திருநாள் பலிப்பூசை 16 ஆம் திகதி காலை நடைபெறும் என்று அருட் திரு. ஜெகன்ஜே அடிகள் அறிவித்துள்ளார். (உ-5)

### கல்வி, தேர்ச்சி அடிப்படையில்

## யாழ் மாவட்டத்தில் புலமைப்பரிசில் திட்டம்

### கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

சாவகச்சேரி, ஜூலை 7

யாழ் மாவட்ட ரீதியில் கல்வித் தேர்ச்சி அடிப்படையில் புலமைப் பரிசில்களை வழங்க கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்

கல்விப் பொதுத்தராதரப் பரீட்சைக்குப் பொதுவாகவும் ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், சமூகக்கல்வி ஆகிய ஐந்து பாடங்களுக்கும் தனித்தனியாகவும் புலமைப் பரிசில்களை வழங்கத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட இருக்கிறது.

யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி பரிசளிப்பு வைபவத்தில் இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு க. சி. குகதாசன் தலைமையில் ஆரம்பமான இவ்விழாவில் கல்விப் பணிப்பாளர் தமது பேருரையில் தொடர்ந்து கூறியதாவது:-

ஆசிரியப்பணி புனிதமானது. மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக நாம் வாழவேண்டும்.

புலமைப் பரிசில் பண்ணிசை, கலை, சர்வகலாசாலை மட்டத்திலும் விஸ்தரிக்கப்படவேண்டும்.

இப்பரிசில்கள் சர்வதேச நோக்கில் இடம்பெறச் செய்யவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

திருமதி. தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கியதைத் தொடர்ந்து வட்டாரக் கல்வி அதிகாரி திரு அ. தங்கராசா ஆசி உரையையும் பிரதம கல்வி அதிகாரி திரு கு. சோமசுந்தரம் சிறப்புரையையும் நிகழ்த்தினர்.

கல்லூரி அதிபர் தமது அறிக்கையைப் படித்து மாணவர், ஆசிரியர், பெற்றோருக்கு விண்ணப்பங்களையும் சமர்ப்பித்தார். (இ-31)

## ஒரு பாடசாலையின் கல்வி நிலையை பொருட்காட்சி தெளிவாக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 7

ஒரு பாடசாலையின் கல்விநிலையை வெளிப்படுத்துவது இவ்விதமான கல்விப் பொருட்காட்சிகளேயாகும்

யாழ் இளைய தம்பி இந்து வித்தியாலயக் கல்விப் பொருட்காட்சியை ஆரம்பித்துப் பார்வையிட்டபின் நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி திரு க. சிவநாயக மூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்;

தொழில்நுட்பக் கல்வி அதிகாரி திரு ச. சுப்பிரமணியம் பேசும் பொழுது மாணவர்களைப் பட்டைசக்குத் தயார்பண்ணும்தொழிற்சாலையாக பாடசாலைகள் இயங்கக்கூடாது

மாணவர் வாழ்க்கையில் சிந்தனையாளர்களாகவும் செயலாற்றலுள்ளவர்களாகவும் விளங்க பாடசாலைகள் உதவ வேண்டும் என்றார்.

தொழில் அதிபர் திரு. க. கனகராசா, யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. எஸ் பொன்னம்பலம், பெரியபுலம் மகா வித்தியாலய அதிபர் திரு. வி. எஸ். சிவபாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்

அதிபர் திரு க. கணேசதாசன் நன்றி கூறினார்.

இப்பாடசாலை சில தினங்களாக ஒரு தொழிற்சாலையாகக் காட்சியளித்தது. ஆசிரியர்களும் மாணவர்களும் உற்சாகமாகவும் ஊக்கத்துடனும் பாடுபட்டார்கள் என்றார் அவர்.

மிகச் சிறந்த ஆக்கங்களைப் படைத்த மாணவர்களுக்கு சாந்தி அச்சக உரிமையாளர் திரு. தி. நாகரத்தினம் பரிசில்களை வழங்கினார். (இ)

### கணித ஆசிரியர் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

தற்போது கோப்பாயில் இயங்கும் பலாலி ஆசிரிய கலாசாலை தமிழ் மன்றம் நடத்திய நாடகப் போட்டியில் கணித நெறி பயிலும் ஆசிரிய மாணவர்கள் முதலாமிடத்தைப் பெற்றனர்.

குழந்தை எம். சண்முகலிங்கம் எழுதித் தயாரித்த 'வாற்பேத்தைகள்' என்ற இந்த நாடகத்தை இளவாலை என்றியரசர் கல்லூரி ஆசிரியர் விஜயன் நெறிப்படுத்தியிருந்தார்.

விஞ்ஞான நெறி பயிலும் ஆசிரிய மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் விவசாயப் பயிற்சியினர் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். கலாநிதி மௌனகுருவும் திரு சண்முகலிங்கமும் மத்தியஸ்தர்களாகப் பணிபுரிந்தனர்.

தமிழ் மன்றத் தலைவர் திரு. திலகரத்தினம் நன்றி கூறினார், (இ-ஒ)

## கல்விப் பொருட்காட்சி ஒரு கணக்கெடுப்பு

### பிரதம கல்வி அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 7

இன்று யாழ்மாவட்டத்தில் பரவலாக நடைபெற்றுவரும் கல்விப் பொருட்காட்சிகள் மாணவர்களின் கல்வி பற்றிய ஒரு கணக்கெடுப்பு, இருப்பெடுப்பு போன்றதே. இக்கணக்கெடுப்பை, இருப்பெடுப்பை செய்பவர்கள் பெற்றோர்களே

பிரதம கல்வியதிகாரி கு. சோமசுந்தரம் இவ்வாறு கூறினார்.

யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற கல்விப் பொருட்காட்சியைத் திறந்து வைத்து அவர் மேலும் பேசியதாவது:

பொருட்காட்சிகள் வெறும் வேடிக்கைகளுக்காக நடத்தப்படவில்லை. மாணவர்களின் சிந்தனைத் திறன், கற்பனை வளம், யதார்த்தரீதியான அணுகுமுறை, கற்றதைப் புரிந்துகொள்ளும் தன்மை என்பவற்றை வெளிக்கொணரவே பொருட்காட்சிகள் கல்விப் பணிப்பாளரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இப்படி அவர் கூறினார்.

விழா கல்லூரி அதிபர் சி. சிவசரவணபவான் தலைமையில் நடைபெற்றது

வட்டாரக் கல்வியதிகாரி இ. சிவானந்தன், உடற்பயிற்சி அதிகாரி வி. கணேசலிங்கம், கணித ஆசிரிய ஆலோசகர் எ. நவசபேசன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (இ-5)

## அரச எம்.பி.க்களுக்கும் ஜனாதிபதி விளக்குவார்

கொழும்பு, ஜூலை 7

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எம்.பி.க்களுக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தன மாகாண சபை யோசனைகள்பற்றி விளக்கமளிக்க இருக்கிறார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் ஜூலை 8ஆம் திகதியில் இருந்து 11ஆம் திகதிவரை ஜனாதிபதி ஜெயவர்த்தன அரச எம்.பிக்களைச் சந்தித்துப் பேசுவார்.

ஐ. தே. க. செயற்குழு உறுப்பினர்களையும் ஜனாதிபதி சந்தித்துப் பேசுவார். (உ-எ)


விமானச்சிட்டுக்கள், பாஸ்போர்ட் பொண்ட், விசா, ரெலக்ஸ்

CONFIRMATION RE-CONFIMATION

தொலைபேசிச் சேவை; 23364, 23866

நிப்பொன் ரெலி ரவல்ஸ்

2G, ஸ்ரான்லி வீதி,

கஸ்தூரியார் ஸ்ரான்லி வீதிச் சந்தி,

யாழ்ப்பாணம்.



செனித்தின் முக்கிய

அறிவித்தல்

தயவு செய்து வாடிக்கையாளர்கள் வியாபாரிகள் கவனிக்க!

1. எம்மால் விநியோகிக்கப்படும் நெல்விரசம் மற்றும் பொருட்கள் தர ஆராய்விற்குப் பின்னே உங்கள் கைக்கு வந்தடைகின்றது

2. எக்காரணம் கொண்டும் தரம் மாற்றப்படாதென்கின்ற உத்தரவாதத்தில் பாவனையாளர்களுக்கு விற்கப்படுகின்றது.

3. விநியோகிக்கப்பட்ட பொருட்களுக்கு குறைந்தது 180 நாட்கள் முழு உத்தரவாதம் கொடுக்கப்படுகின்றது.

பாவனையாளருக்கு

4. தயவு செய்து தேவையற்ற குறைகளை எமது விற்பனை பிரதிநிதிக்கு சுமத்த வேண்டாம். உங்கள் மன நிறைவே எங்கள் செல்வம் உங்களுக்கு மன நிறைவென்றால் மற்றவர்களுக்குச் சொல்லுங்கள் — அல்லது எங்களுக்குச் சொல்லுங்கள்.

ஆதரவிற்கு நன்றி

ஜோ. எகட்டன்

(செனித்)

யாழ்நகர்



பிரயாண ஒழுங்குகள்

* கனடா
* ஜேர்மன்
* பிரான்ஸ்
* டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும் பாஸ்போட், விசா, பொன்ட் (BOND), ரிக்கட் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்

டென்மார்க் -- கனடா

ஆகிய இடங்களுக்கு கொழும்பிலிருந்து நேரடிப் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ

(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)

மானிப்பாய்.



உடன் விற்பனைக்கு உண்டு

விரைவில் பலன் தரக்கூடிய நல்ல இன தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு தென்னை ஆராய்ச்சியாளர்களின் போதனைக்கு அமைய நாற்றுப் போடப்பட்டவை.

விலை ரூபா 3-00, 5-00

தொடர்புகொள்க;

ஷப்ரு நிலேந்ரேஸ் தென்னந்தோட்டம் குடமியன், வரணி.

விளம்பர இல: 26, மே/பா. உதயன் மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

நீ உண்மையாகத் தியானம் பழகு அப்போது ஆண்டவனின் அளவற்ற கருணையின் இருப்பை அறிந்து கொள்வாய் ஆண்டவனின் தேவையையும் சத்தியத்தையும் அன்பையுமே விரும்புவான்
— அன்னை சாரதாதேவி

உதயன்
உண்மை - விரிசாமை - நடுநிலைமை
இல, 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம், 07-07-86 த பெ 23

## மத்திய அரசிடம் 19; மிகுதியால் என்ன பயன்?

உத்தேச மாகாண சபை யோசனைகளில், பத்தொன்பது துறைகள் சார்ந்த அதிகாரங்கள் முற்றுமுழுதாக மத்திய அரசாங்கத்துக்கு என்றே ஒதுக்கப்பட்டிருக்கின்றன

அந்தப் பத்தொன்பதில் சில துறைகளை மத்திய அரசாங்கம் தானே வைத்திருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை உணர முடிகிறது.

வெளிவிவகாரம், வெளிநாட்டு வர்த்தகம், நிதி—நாணய விவகாரம், நாட்டின் பாதுகாப்பு, குடியகல்வு—குடிவரவு, தேர்தல் — ஆகிய துறைகளை மத்திய அரசு முழுக்க முழுக்கத் தானே வைத்திருப்பதை ஆட்சேபிக்க நியாயமில்லை. ஏனைய நாடுகள் பலவற்றிலும் அந்த முன் உதாரணம் உண்டு

ஆனால் தபால் தந்தி நிர்வாகம், நீதி நிர்வாகம், ஆறுகள் — நீர் நிலைகள், கனியங்கள், வானொலி — தொலைக்காட்சி ஆகிய துறைகளை முற்று முழுதாக மத்திய அரசாங்கம் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க விரும்புவது மானது அல்ல

வானொலி — தொலைக்காட்சி ஆகிய இரண்டும் பொதுசனத் தொடர்பு சாதனங்கள். மாகாண அரசாங்கங்களின் திட்டங்களைப் பிரபல்யப்படுத்தவும், மக்களுக்கு வேண்டிய தகவல்களை வழங்கவும் அவை இரண்டும் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் பரவல் செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தபால் — தந்தி நிர்வாகத்தையும் பரவல் செய்வதே உகந்தது. மக்களின் அத்தியாவசிய சேவைகளில் அதுவும் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. தபால்-தந்தி நிர்வாகத்தை மாகாணங்களுக்கும் பகிர்ந்தளிப்பதால் என்ன கேடு வரப்போகிறது...?

போக்குவரத்தும் மக்களின் மிக அத்தியாவசிய சேவை. அது சம்பந்தமான அதிகாரத்தையும் மாகாண அரசுகளுக்கு பகிர்வதைத் தவிர்க்கக் கூடாது.

ஆறுகள், நீர்நிலைகள், கனியங்கள் ஆகிய இயற்கை வளங்கள் தொடர்பான அதிகாரத்தையும், துறைமுகங்கள், இறங்குதுறைகள் ஆகியவற்றின் நிர்வாக அதிகாரங்களையும் மத்திய அரசு பூரணமாகத் தானே வைத்திருக்கப் போகிறதாம்

அந்தந்தப் பகுதியில் உள்ள இயற்கை வளத்தையும், இயற்கை அமைப்பையும் அதே பகுதி மக்கள் நிர்வகிக்கவும் — பராமரிக்கவும் தடை விதிப்பது அநியாயமானது. இயற்கை அன்னை குறிப்பிட்ட பகுதி மக்களுக்கு அளித்த வளத்தை — செல்வத்தை அவர்கள் அனுபவிக்க விடாது தட்டிப்பறிப்பதற்குச் சமனானது. எனவே அவை சம்பந்தமான நிர்வாக அதிகாரத்தில் பெரும்பங்கு மாகாண அரசுகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

நீதி நிர்வாகம் சம்பந்தமான அதிகாரங்களும் பூரணமாக மத்திய அரசிடமே இருக்கப் போகின்றன.

"பிந்திய நீதி கிடையாத நீதி" என்று சொல்வர். நீதி நிர்வாகம் ஒரே இடத்தில் குவிந்திருப்பதால் வழக்குகள் வருடக் கணக்காக இழுபடுவது இப்போதைய அனுபவம்.

நீதி நிர்வாகம் சம்பந்தமாக மாகாண மக்கள் முடிவு செய்யும் அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்படுவது மிக அவசியம்

1983இல் ஜி. பார்த்தசாரதியும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் சேர்ந்து தயாரித்த 'சி-இணைப்பில்' நீதிமன்ற நிர்வாகம் பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது

ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் மேல் நீதிமன்றம் நிறுவவும் அதில் வகைசெய்யப்பட்டிருந்தது. ஆனால் இப்போதைய மாகாண சபை யோசனைகளில் அதனை மத்திய அரசு அப்படியே 'விழுங்க' வகை செய்யப்பட்டிருக்கிறது.

நீதி, தபால்—தந்தி, போக்குவரத்து, இயற்கை வளம் மற்றும் பிரதான துறைகளை முழுக்க முழுக்க மத்திய அரசு வைத்துக்கொண்டு, நடைமுறைப்படுத்தப்படும் அதிகாரப் பகிர்வு உண்மையான பரவலாக்கல்தானா?

இது, அரசியல் தீர்வு என்று இராணுவ நடவடிக்கையை நாடி உலகத்தை ஏமாற்றியதை விட பெரிய ஏமாற்று வித்தை என்று சொல்லத் தோன்றுகிறது அல்லவா?

# நிக்கராகுவா பிஷப் நாடுகடத்தலுக்கு பாப்பரசர் கண்டனம்

கராகஸ், ஜூலை 6

நிக்கராகுவாவிலிருந்து முக்கிய ரோமன் கத்தோலிக்க பிரமுகரான பிஷப் தாபலு வேகாஸ் நாடுகடத்தப்பட்டது அநாகரிகமான செயலாகும்.

நிக்கரகுவா அரசின் இச்செயல் கண்டனத்துக்குரியது.

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

கொலம்பிய விஜயத்தை மேற்கொண்டிருக்கும் பாப்பரசர் அங்கு தாம் நடத்திய ஆராதனையில் கலந்து கொண்ட பெருந்திரளான மக்கள் மத்தியில் தாது அறிக்கையை வெளியிட்டார்.

நிக்கரகுவா கிளர்ச்சியாளர்களுக்கு 10 கோடி டாலர் நிதி உதவி வழங்குவது என அமெரிக்கா மேற்கொண்ட முடிவு குறித்து வேகாஸ் தமது கருத்தை வெளியிட்டிருந்தார் என்பது தெரிந்ததே

"சுதந்திரம் பேணப்படும் எந்த ஒரு நாட்டிலும் மக்கள் சுதந்திரமாகப் பேச அனுமதிக்கப்படவேண்டும்.

தமது பேச்சு சுதந்திரத்தை பயன்படுத்திய தற்காக பிஷப் வேகாஸ் அநியாயமான முறையில் நாடு கடத்தப்பட்டுள்ளார். இது நம்ப முடியாத ஒரு செயலாகும்

லத்தீன் அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு தீய சக்திகளின் ஊடுருவல் பெரும் சவாலாக அமைந்து வருகின்றது".

—இவ்வாறு பாப்பரசர் மேலும் தெரிவித்தார். (உ-ஓ)

## இராணுவ ஆட்சியை நீக்கக் கோரி சிலியில் வேலை நிறுத்தம்

சந்தியாகோ, ஜூலை. 6

சிலி நாட்டில் நடந்த 12 வருடங்களாகவுள்ள இராணுவ ஆட்சியை நீக்குமாறு கோரி தலைநகரான சந்தியாகோவில் பொது வேலை நிறுத்தமும் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடந்தன

சிலி அரசாங்கம் அவசரகால நிலைமையின் கீழுள்ள அதிகாரங்களைப் பிரயோகித்து செய்தித் தணிக்கையை உடனடியாக அமுல்படுத்தியது

அத்துடன் பொது வேலை நிறுத்தத்தையும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் ஏற்பாடு செய்த 17 தலைவர்களைக் கைது செய்தது

நாட்டிலுள்ள நான்கு வானொலி நிலையங்கள் அரசின் தணிக்கை முறையை அமுல்படுத்தாமல் செய்திகளை வெளியிட்டதாக குற்றம்சாட்டி ஒலிபரப்புக்கள் தடை செய்யப்பட்டன. (இ-ஓ)

## எதிர்ப்புக்கு மத்தியில் கொலம்பியாவில் பாப்பரசர்

கராகாஸ், ஜூலை 6

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது சின்னப்பர் ஒருவாரகால விஜயம் மேற்கொண்டு கொலம்பியா வந்து சேர்ந்தார்.

அமெரிக்காவிலும் உலக நாடுகள் பலவற்றிலும் அதிகரித்து வரும் மனித உயிர்ப்பலிகளையும் சித்திரவதைகளையும் தடுக்க அனைவரையும் பிரார்த்திக்குமாறு பாப்பரசர் வேண்டுகோள்விடுத்தார்.

அத்துடன் ஏழை—பணக்கார பேதம் மாறவும் மறையவும் வேண்டும் எனவும் பிரமாண்டமான கூட்டத்தில் தெரிவித்தார்.

கொலம்பியாவிற்கு பாப்பரசர் விஜயம் செய்வதை எம். 19 என்ற கெரில்லா இயக்கமும் கொலம்பிய புரட்சிகர இயக்கமும் எதிர்த்ததை அடுத்து பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தன. (இ-ஓ)

முதுபெரும் அரசியல் வாதி

## ஜெகஜீவன்ராம் நேற்றுக் காலமானார்

புதுடில்லி, ஜூலை. 6

காங்கிரஸ் (ஜெ) கட்சியின் தலைவர் திரு ஜெகஜீவன்ராம் நேற்றுக் காலை டில்லியில் மரணமானார்

மே மாதம் எட்டாம் திகதி புதுடில்லியிலுள்ள ராம் மனோகர் லோகிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஜெகஜீவன்ராம் நேற்று காலை 10. 20க்கு உயிர் துறந்தார்.

சுதந்திரப் போராட்ட வீரரான இவர் கடந்த நான்கு தசாப்தங்களாக அரசியல் வானில் பிரகாசித்தார் மத்திய அமைச்சரவையில் சுமார் முப்பது வருடங்கள் பணிபுரிந்த பெருமையும் இருக்குண்டு. 1908 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ம் திகதி பீகார் மாநிலத்தில் பிறந்த இவரது வாழ்வின் பெரும் பகுதியை பின்தங்கிய வகுப்பினரின் நல்வாழ்வுக்கு அர்ப்பணித்தார்.

மறைந்த தலைவருக்கு பிரதமர் ராஜீவ்காந்தி பல மத்திய அமைச்சர்கள், எதிர்கட்சி பிரமுகர்கள் நேரடியாக ஆஸ்பத்திரி சென்று அஞ்சலி செலுத்தினர் (ஓ)

## பேருவில் பெரும் சேதம்

லீமா, ஜூலை 6

இடதுசாரி கெரில்லாக்களின் ஆர்ப்பாட்டத்தால் பேரு நாட்டில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது

சீன தூதரகமும், இத்தாலிய தூதரகமும் குண்டு வீச்சால் தாக்கப்பட்டன. (ஓ)

## ஜப்பான் தேர்தல் முடிவுகள் இன்று

டோக்கியோ, ஜூலை 6

ஜப்பான் நாட்டுப் பொதுத் தேர்தல்களின் வாக்குப் பதிவு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது

பாராளுமன்றத்தின் கீழ் சபைக்கு 512 அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுக்கும் வகையில் எட்டரைக் கோடி மக்கள் வாக்களித்தனர்

126 உறுப்பினர்கள் மேல் சபைக்கு தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.

1988ல் கீழ் சபைக்குத் தேர்தல்கள் நடப்பதாக இருந்தபோதிலும் மேல் சபைத் தேர்தல்களோடு அந்த வாக்குப்பதிவை நடத்த ஜப்பான் பிரதமர் திரு. நாகஸோனி முடிவு செய்தார்

பிரதமர் ஹிரோ நாகஸோனியின் லிபரல் டெமோகிரட்டிக் கட்சியே மீண்டும் பதவிக்கு வரும் என அவதானிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

தேர்தல் முடிவுகள் இன்று திங்கட்கிழமை வெளியாகும். (ஷ)

## சீக்கிய மாணவ தலைவர் கைது

சண்டிகார், ஜூலை 6

பஞ்சாப் மாநில படுகொலைகள் தொடர்பாக பலகாலமாகத் தேடப்பட்டுவந்த அகில இந்திய சீக்கிய மாணவர் சம்மேளனத் தலைவர் ஹரிந்தர்சிங் பொலிஸாரல் கைது செய்யப்பட்டார்.

இவரைப் பிடித்துத் தருபவர்களுக்கு 8 000 டாலர்கள் சன்மானம் வழங்குவதென பொலிஸார் அறிவித்திருந்தனர். (ஓ)

## பெய்ரூட்டில் துருப்புக்கள் நடமாட்டம்

பெய்ருட், ஜூலை 6

சிரியத் துருப்புக்களின் நடமாட்டம் மேற்கு பெய்ருட் பகுதியில் அதிகரித்துள்ளது

1982க்குப் பின்னர் லெபனானில் அதிக அளவு சிரியத் துருப்புக்கள் காணப்படுவது இதுவே முதல்தடவையாகும்

இஸ்ரேலிய படைகளின் ஆக்கிரமைப்பை தொடர்ந்து 1982 இல் சிரியத் துருப்புகள் இப்பகுதியிலிருந்து வெளியேறியிருந்தன (உ-ஓ)

கறுப்பு இன மக்கள்கொலை:

## ஜனாதிபதி போத்தா தெரிவித்த கருத்து

கேப்டவன், ஜூலை 6

கறுப்பு இன மக்களுக்கு பிரச்சினை உண்டு என்பதை அரசு நன்கு உணர்ந்துள்ளது இதனால் இதுவரை சர்ச்சைக்குரியதாயிருந்த சில சட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி போத்தா மேற் கண்டவாறு கூறினார்

அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டதால் அப்பாவி கறுப்பு இன மக்கள் கொலை செய்யப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது

சமாதான மூலம் தீர்வுக்கு வரததயாராக இருக்கும் தென் ஆபிரிக்க அரசு, நாட்டை அழிக்க நினைப்பவர்களின் செயலுக்கு ஒருபோதும் இன்மளிக்கமாட்டாது என்றும் அவர் கூறினார். (இ-ஓ)

## சமய செய்திகளில்

### சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த பத்து நாட்களாக நடைபெற்று வரும் மண்டலாபிஷேகம் இன்று சங்காபிஷேகத்துடன் பூர்த்தி அடையும்.

சங்காபிஷேக கிரியைகள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா. வைத்திய நாத சிவாசாரியர் தலைமையில் நடைபெறும்.

ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் கடந்த மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

### மஞ்சம் வெள்ளோட்டம்

அச்சுவேலி ஜூலை 7

அச்சுவேலி நாவற்காடு சந்தசுவாமி கோயிலில் புதிதாக உருவாக்கப்பட்ட மஞ்சம் இன்று திங்கட்கிழமை வெள்ளோட்டம் விடப்படவுள்ளது.

மஞ்ச வெள்ளோட்ட விழாவில் நல்லை ஆதீன குரு மகாசந்நிதானம் அருட்திரு சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமச்சாரிய சுவாமிகள் கலந்து கொண்டு ஆசி வழங்குவார்,

ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றது.

தீர்த்தத் திருவிழா இன்று திங்கட்கிழமை யும் பூங்காவத் திருவிழா நாளையும் நடைபெறும்.

சென்ற மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகிய உற்சவம் தொடர்ந்து 29 தினங்கள் நடைபெற்ற பூங்காவனத் திருவிழாவிடன் முடிவடைகின்றது (உ-எ)

மகாணசபை யோசனைகள்:

# நிதி, நிறைவேற்று அதிகாரங்கள்

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் தயாரித்த புதிய யோசனைகள் அரசியல் கட்சிகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

அந்த யோசனைகளின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதற்குஉத்தேசிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தொடர்ந்து உதயனில் பிரசுரமாகின்றன

இன்று இறுதிப் பகுதி வெளியிடப்படுகிறது.

### நிறைவேற்று அதிகாரங்கள்:

9 ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் கவர்னர் ஒருவர் முதலமைச்சரை நியமிப்பார் மாகாண சபையில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் செல்வாக்கைப் பெற்ற ஒருவரையே கவர்னர், முதலமைச்சராக நியமிப்பார். சபையின் உறுப்பினர்கள் மத்தியில் இருந்து அமைச்சரவை ஒன்றை முதலமைச்சர் தெரிவு செய்வார்.

10 முதலமைச்சரின் சிபாரிசில் கவர்னர் அமைச்சரவையை நியமிப்பார்

அ மாகாணசபையின் சட்டவாக்கங்களைச் செயற்படுத்துதல் உட்பட சகல அதிகாரங்களைக் கொண்ட நிறைவேற்று அதிகாரங்கள் கவர்னருக்குக் கொடுக்கப்படும். கவர்னர் அந்த அதிகாரங்களை நேரடியாகவோ, அல்லது வேறு அதிகாரிகள் மூலமாகவோ செயற்படுத்துவார்.

ஆ முதலமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் நாடாளுமன்ற எம்பிகளாக இருக்கத் தேவையில்லை. அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இல்லாத விடத்தில் அவர்கள் நாடாளுமன்றத்துக்குப் பதிலளிக்க வேண்டிய தேவையில்லை.

### நிதி அதிகாரங்கள்;

11 வரி, கட்டணங்கள் மற்றும் வளங்கள் மூலம் கடன்கள் அறவிடும் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு இருக்கும் இப்படிச் சேகரிக்கப்படும் பணம் பிராந்திய நிதியத்தில் சேர்க்கப்படும் மத்திய அரசின் மானியம் நிதி ஒதுக்கீடுகளும் இந்த நிதியத்தில் சேர்க்கப்படும் நிதி ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு இணங்க நிதிவளங்களினால் கிடைக்கப்படும் வருமானமும் இந் நிதியத்தில் சேர்க்கப்படும்.

அ கடன், மானியம், வெளிநாட்டுக்கடன், ஆகியவை மானியம் பெறுவதற்கு தேசியத்திட்டம் ஒன்றின் கீழ் மத்திய அரசின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

ஆ என்ன மாதிரியான வரிகளை மாகாண சபைகள் வசூலிக்கலாம் என்பது நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் விளக்கும்.

### தேர்தலும் பதவிக் காலமும்

12. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி மாவட்ட நிர்வாக அடிப்படையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் மாவட்டத்தில் உள்ள சனத்தொகைக்கு ஏற்ப சபையின் உறுப்பினர் தொகை நிர்ணயிக்கப்படும்

மாகாண சபையின் பதவிக் காலம் நாடாளுமன்றப்பதவிக் காலத்துடன் இணைந்து இருக்கும்.

### மாகாணசபை உறுப்பினர்பதவி

13 மாகாண சபையின் உறுப்பினர்கள், மாகாணத்தில் இருந்து தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களாக இருப்பார்

தேர்தல் மவட்டங்களின் அடிப்படையில் மாகாணத்தில் தெரிவு செய்யப்படும் எம்பிகள் மாகாண சபைக் கூட்டத்தில் பேசுவதற்கு உரிமைபெற்றவர்கள்; ஆனால் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது.

14 மாகாண சபை நடவடிக்கைகளில் திருப்தி காணாத விடத்தில், அந்த மாகாண சபையின் நடவடிக்கைகளைச் சீர்படுத்த ஜனாதிபதி உத்தரவுகளை இடுவார் மாகாண சபையைக் கலைக்கும் உத்தரவையும் ஜனாதிபதி பிறப்பிக்க முடியும்

மாகாண சபையை கலைக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் அந்தக் உத்தரவு 6 மாதங்களுக்கு அமுலில் இருக்கும் இந்தக் கலைக்கும் உத்தரவுக்கு நாடாளுமன்றம் இரண்டு மாதங்களில் அங்கீகாரம் வழங்கினால் ஒரு ஆண்டு காலம் வரை அந்தக் கலைப்பு உத்தரவு நீடிக்கும்.

15. அரசமைப்புச் சட்டத் திருத்தம், மாகாண சபைகளை உருவாக்கும் சட்டமூலம் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்.

16 சமூகங்களின் பயத்தை நீக்குமுகமாக பின்வரும் மேலதிக ஏற்பாடுகளை மாநாடு பரிசீலனைக்கு எடுக்கத் தயாராக உள்ளது;

அ ஒரு மாகாண சபை இன்னொரு மாகாண சபையை, பொது அக்கறை கொண்ட விஷயங்கள் சம்பந்தமாக கலந்தாலோசிக்கக் கூடியதான ஸ்தாபன ஒழுங்குகளைச் செய்தல்

ஆ. மாகாண அரசாங்கத்தில் இனரீதியான குழுக்களின் பங்களிப்பு இடம் பெறுவதை உறுதிப்படுத்தக் கூடியதான சட்ட, ஸ்தாபன ஒழுங்குகளைச் செய்தல்.

இ மாகாண அரசாங்கத்தில் இனரீதியான குழுக்களுக்கு கூடிய பங்களிப்பு இருக்கக் கூடியதாக பின்வரும் அமைப்புக்கள் அமையும்:

அ. பிரதேச உதவி அரச அதிபர் பிரிவு ரீதியிலாக சமூக அமைப்பு.

ஆ உதவி அரச அதிபர் பிரிவு ரீதியிலான பிரதேச சபை.

இ உள்ளூராட்சி அமைப்பு

17 இந்திய அரசமைப்பில் காணப்படும் ஏழாவது அட்டவணையில் காணப்படும் விஷயங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும்? (உ-எ)

## முல்லைத்தீவில் அகதிகளுக்கு உதவி
### புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 7

முல்லைத்தீவு மாவட்டத்தில் தஞ்சம் புகுந்துள்ள 764 தமிழ்க் குடும்பங்களுக்குத்தேவையான சமையல் பாத்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்க தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் முன்வந்துள்ளது.

திரியாய் இடம்பெயர்ந்தோர் சங்கத்தின் முறையீட்டத்தைத் தொடர்ந்து, முல்லைத்தீவு பிரசைகள் குழுவின் தூதுக் கோஷ்டி ஒன்று, கடந்த வெள்ளிக்கிழமை புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளைச் சந்தித்து உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டனர்.

அடுத்த வாரம் தேவையான உதவிகளைச் செய்வதாக புனர்வாழ்வுக் கழகத்தினர் பிரசைகள் குழுத் தூதுக் கோஷ்டிக்கு உறுதியளித்தனர்.

இத்தகவல்களை முல்லைத்தீவுப் பிரசைகள் குழுப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (உ.எ)

### சொல்மாலை



குறள்:

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

பொருள்:

அறம் இல்லாதவற்றைச் சொன்னாலும் சொல்லலாம்; சான்றோர் பயனில்லாத சொற்களைச் சொல்லாமல் இருத்தல் நல்லது.

## மத நிறுவனங்களுக்கு ரூ 10ஆயிரம் நிதியுதவி
### புராணபடனம்,பண்ணிசைப் பயிற்சிக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 7

புராணபடனம், பண்ணிசைப்பயிற்சி இவற்றை நடத்துதற்கு மூன்று இந்து மத நிறுவனங்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாவை யாழ் மாவட்ட கலாசார ஆலோசனைக்குழு அனுமதித்துள்ளது.

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சமய நிறுவனங்கள் வருமாறு:

1. துர்க்காதேவி தேவஸ்தானம்
2. நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.
3 பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாசிரமம்.

(உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெலிபோன் ரெலெக்ஸ்
24 மணி நேர சேவை
(எல்லா நாட்களும்)
அமைதியான, பாதுகாப்பான இடம்.
இரவில் தங்குவதற்கு அறைகள்
நியாயமான கட்டணங்கள்
Safe, Convenient Vehicle Parking
Mack Communications & Travels
1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele; 24791, 24836



# உதயன்

07 07 1986 திங்கட்கிழமை



வெளிநாட்டுப் பிரயாணம்
* துரித ஒழுங்குகள்
* சலுகைக் கட்டண விமானச் சீட்டுகள்
* Confirmations, Re-confirmations
* பாஸ்போட், விசா, பொன்ட்
நம்பிக்கையைப் பெற்றவர்கள்
Mack Communications & Travels
1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele: 24791, 24836


## தெஹிவத்தையில் நேற்றுத் தாக்குதல்

திருகோணமலை, ஜூலை 7

சேருவில தொகுதியில் உள்ள தெஹிவத்தை இராணுவ முகாம்மீது நேற்றுக் காலை போராளிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிகின்றது.

அச்சமயம் அப்பகுதியால் மாட்டு வண்டியில் ஏறிச் சென்றுகொண்டிருந்தவர்களில் ஒரு சிங்களப் பெண்ணும் 3 வயதுக் குழந்தையும் உயிரிழந்தனர் காயமடைந்த இன்னொரு பெண் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

வண்டியில் சென்றுகொண்டிருந்த ஏனைய நான்கு பேர் சிறிய காயங்களுடன் உயிர்தப்பினர்.

(உ - எ - 150)

## புதிய யோசனை: இராணுவத்தினருக்கும் விளக்கப்பட்டது

கொழும்பு ஜூலை.7

வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் பணிபுரியும் இராணுவ இணைப்பு அதிகாரிகளுக்கு புதிய மாகாண சபை யோசனைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

கடந்த வாரம் இந்த மாகாணங்களில் கடமையாற்றும் 14 இராணுவ இணைப்பு அதிகாரிகள் கலந்துகொண்ட மாநாட்டுக்கு கூட்டு இராணுவத் தளபதி ஜெனரல் சிறிமரணதுங்கா தலைமை வகித்தார்.

அரசு சமர்ப்பித்துள்ள மாகாணசபை யோசனைகளில் காணப்படும் அதிகாரப் பரவலாக்கல் அம்சங்கள் குறித்து இணைப்பதிகாரிகளுக்கு விவரிக்கப்பட்டன.

ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் தான் கூட்டுத் தளபதி அதிகாரப் பரவலாக்கல் பற்றிய விளக்கத்தை அளித்தார்.

புதிய இராணுவ உத்திகள் குறித்தும் அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

(உ-எ-3)

## உடன் வந்தோரை இழந்த பின் எப்படித் தமிழகம் திரும்புவேன்?

### தப்பிய மீனவர் கண்ணீர்மல்கக் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 7

"என்னுடன் கூட வந்த மீனவர்களை கடலில் பறிகொடுத்துவிட்டு எப்படி நான் தாயகம் திரும்புவேன்?"

இப்படிக் கண்ணீர்மல்க கேட்டார் இந்திய மீனவர் வேலுத்தேவன் கணபதி.

நேற்று முழுவதும் யாழ் ஆஸ்பத்திரியில் அழுதபடி இருந்தார் அவர்.

"ஏன் அழுகிறீர்கள்?" என வினவியபோது அவர் இப்படி அழுதழுது பதில் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வைத்தியர்களும் ஊழியர்களும் என்னை நன்றாக பராமரித்து வருகிறார்கள்

புலிகளும் எனக்கு வேண்டிய உடைகளையும் துணிகளையும் தந்து உதவுகிறார்கள்.

சகலரும் அன்புடன் என்னைக் கவனித்து வருகிறார்கள்.

எனினும்மீண்டும் நான் தாயகம் திரும்பிப்போக வேண்டியதை நினைக்கும்போது ஏன் நானும் கடலில் கொல்லப்பட்டிருக்கலாமே என்று எண்ணத் தோன்றுகிறது.

என்னை நம்பித்தான் இறந்தவர்களின் குடும்பங்கள் இவ்வளவு காலமும் வாழ்க்கை நடத்தி வந்தன

இப்போது அவர்கள் முன் எப்படிப் போவது?

இலங்கை கடற்படையினர் இப்படி ஏன்தான் அநியாயம் செய்கின்றனரோ? இப்படிக் கேட்டவாறு அவர் மீண்டும் குலுங்கிக் குலுங்கி அழுதார்

ஏராளமான பொதுமக்கள் இவருக்கு ஆறுதல் கூறி வருகின்றனர்

(உ-10)

## சிவத்தம்பி ராஜினாமா

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ் மாவட்ட பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுவிலிருந்து பேராசிரியர் கா. சிவத்தம்பி இராஜினாமாச் செய்துள்ளார்.

நேற்று நல்லூர் இந்து வீதியில் நடைபெற்ற இணைப்புக் குழுக் கூட்டத்திலேயே மேற்படி இராஜினாமாவைச் சமர்ப்பித்தார்.

இவர் இணைப்புக் குழுவின் அக்கிராசனராக கடந்த ஒன்றரை வருடங்களாகப் பணிபுரிந்துள்ளார்

பேராசிரியர் தமது இராஜினாமாக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாவது:-

எனக்கு இணைப்புக்குழுவில் இடமளிக்க ஏதுவாக இருந்த வல்வெட்டித்துறை பிரசைகள் குழுவிலிருந்தும் நான் இராஜினாமாச் செய்துள்ளேன்.

எனவே இணைப்புக் குழுவிலிருந்தும் நான் இராஜினாமா செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

இராணுவ அத்துமீறல்கள் அதிகரித்துள்ள இவ்வேளையில்— சிவில் நிர்வாகம் முற்றாகத் தடைப்பட்டுள்ள வேளையில்— தமது பிரச்சினைகளை முன்வைக்க மக்கள் பிரசைகள் குழுக்களையே நம்பியுள்ளனர்.

இராணுவமோ மக்களை முகாம்களுக்கு அழைத்து நிர்வாகத்தை நடத்த நினைக்கிறது.

எனவே பிரசைகள் குழுக்கள் விழிப்பாக இருந்து தொடர்ந்தும் தம் சேவையை மக்களுக்கு வழங்க வேண்டும்— இப்படிக் குறிப்பிடப்பட்டுள்ளது

(உ-5)

## 'கெபரு' ஹெலிகளை--

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

பேரில் காங்கிரஸின் அனுமதியைப் பெற வேண்டியதாயிற்று—

இப்படி 'பார் ஈஸ்டர்ன் இகனொமிக் ரிவியூ' செய்தி மேலும் தெரிவித்தது.

இதனிடையில் அமைச்சரின் அமெரிக்க விஜயத்திற்கான வேறு ஒரு காரணமும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அடிபடுகின்றது.

இலங்கை அரசின் சில 'பிரச்சினைக்குரிய நடவடிக்கைகளுக்கு' விளக்கம் பெறுவதற்காக உயர் பிரதிநிதி ஒருவரை அனுப்புபடி அமெரிக்க அரசு இலங்கையைக் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்தே, அமைச்சர் அத்துலத் முதலி அமெரிக்கா சென்றார் — இதுவே அந்தக் காரணம்.

இலங்கையின் 'பிரச்சினைக்குரிய நடவடிக்கைகள்' என்று பின்வரும் விஷயங்களை அமெரிக்கா கருதுகின்றதாம்.

1. "வோய்ஸ் ஒப் அமெரிக்கா" நிலையத்தை நிறுவும் திட்டத்தை அனுமதிப்பதில் இலங்கை அரசு ஏன் தாமதம் காட்டுகின்றது?

2 பாரிஸில் நடந்த 'இலங்கைக்கு உதவும் நாடுகள்' கூட்டத்தில் கலந்து கொள்ளச் செல்லும் முன்னர் 'அமெரிக்க உதவி' பற்றி நிதி அமைச்சர் ரொனிடிமெல் நிகழ்த்திய 'நடபுறவற்ற பேச்சு'.

3 ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் உத்தேச ரஷ்ய விஜயம்

## கூட்டணியின் ........

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சியல்குழு தலைவர்களுக்கு இந்த அதிகாரத்தை வழங்கியது.

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி, வெளியுறவு அமைச்சர் சிவ்சங்கர், வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் ஆகியோரை புதுடில்லியில் சந்தித்த பின்னர் கூட்டணியின் நிலைப்பாடு குறித்து அக்கட்சித் தலைவர்கள் முடிவு செய்வர்.

(உ-எ)

## மாங்கேணி--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படி வாழைச்சேனை வீதியில் உள்ள மதகு ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது

ஹெலிகொப்டர் ஒன்று அந்த இடத்துக்கு விரைந்தது. தாழ்வாகப் பறந்து துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்ட ஹெலிக்கொப்டர் மீது போராளிகள் ரொக்கெட் லோஞ்சரினால் தாக்குதலை நடத்தவே, ஹெலிக்கொப்டர் மேலெழும்பிச் சென்றது

தாக்குதலுக்குள்ளான முகாமில் மின்சார வெளிச்சம் இல்லாத காரணத்தினால் இறங்குவதற்கான சிக்னலை ஹெலிக்கொப்டருக்குக் கொடுக்க முடியாது போயிற்று.

இத்தாக்குதலில் முகாம் சேதமடைந்தது. போராளிகள் சென்ற பின்னர் தான் ஹெலிக்கொப்டர் வந்து காயமடைந்த சிப்பாய்களை பொலனறுவை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றது.

போராளி தரப்பில் சேதங்கள் ஏற்படவில்லை என்று சொல்லப்படுகின்றது.

(உ-எ-21)

## அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி

அமரர் க. சண்முகம் நினைவாக ஆண்டு தோறும் கட்டுரைப் போட்டி நடத்தி மாணவர்கள் மத்தியில் சிந்தனையைத் தூண்டி, அவர்களின் எழுத்தாற்றலை வளர்ப்பது எமது நோக்கம்.

இந்த வரிசையில் இடம்பெறும் முதலாவது போட்டி இது

பாடசாலை மாணவர்களுக்கான இப்போட்டி, பின்வரும் மூன்று நிலைகளில் நடைபெறும்.

* ஆரம்ப பிரிவு :- 6ம், 7ம், 8ம் வகுப்புகள்
* இடைநிலைப்பிரிவு:- 9ம்,10ம் வகுப்புகள்
* உயர்தர பிரிவு: க பொ த. உயர்தர வகுப்பு.

கட்டுரைப் போட்டிக்குரிய தலைப்புகள் வருமாறு:-

ஆரம்ப பிரிவு :-
"அன்றாட வாழ்க்கையில் சமயம்"

இடை நிலைப்பிரிவு:-
"சமயமும் அறிவியலும்"

உயர்தர பிரிவு:-
"சமயம் காட்டும் அன்புநெறி"

ஆரம்ப பிரிவினர் புல்ஸ்காப் தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும், இடைநிலைப் பிரிவினர் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலும் உயர்தரப் பிரிவினர் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும் கட்டுரைகளை எழுதும்படி வேண்டப்படுகின்றனர்.

ஒரு மாணவன் ஒரு கட்டுரை மட்டுமே போட்டிக்கு அனுப்பலாம். அதுவும் அவரது சொந்தப் படைப்பாக இருத்தல் அவசியம்.

கட்டுரையைப் போட்டிக்கு அனுப்பும் போது பாடசாலை அதிபரின் உறுதியுரை இணைக்கப்படல் வேண்டும். கட்டுரையாளர் தமது பாடசாலை மாணவன் என்பதையும், கட்டுரை மாணவனது சொந்தப் படைப்பு என்பதையும் அதிபர் தமது உறுதியுரையில் தெளிவுபடுத்துவது முக்கியம்.

இப்போட்டியில் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட், நிறுவனத்தின் ஊழியர்கள், அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் இப்போட்டியில் பங்கு பெற முடியாது.

கட்டுரைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி" என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

போட்டி முடிவு நாள்:- 27 - 07 - 1986.

அனுப்பவேண்டிய முகவரி:-
பொறுப்பாளர்,
அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி,
மே/பா சஞ்சீவி,
த. பெ. எண்: 23.
யாழ்ப்பாணம்

பரிசுகள்:

ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே வழங்கப்படவுள்ள 3 பரிசுகளின் விவரங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| முதற்பரிசு | — ரூபா. 500/- |
| இரண்டாவது பரிசு | — ரூபா. 200/- |
| மூன்றாவது பரிசு | — ரூபா. 100/- |

இவற்றுடன் முதற் பரிசு பெறும் மாணவன் பயிலும் பாடசாலைக்கும் தனியான பரிசு உண்டு.

போட்டி முடிவுகள் சஞ்சீவியில் வெளியிடப்படும்.

## விளையாட்டரங்கு

### கல்வித் திணைக்கள சுற்றுப் போட்டி:

## மகாஜனக் கல்லூரி 3 பிரிவுகளிலும் வெற்றி

காங்கேசன்துறை, ஜூலை 7

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் மூன்று பிரிவுகளிலும் மானிப்பாய் இந்துக் கல்லூரியை தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி தோற்கடித்தது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் முதலாம் பிரிவு ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது மகாஜன அணியின் சார்பில் தயாளன், சத்தியதாஸ், பகீரதகுமார் ஆகியோர் திறமையாக விளையாடி பலரின் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டனர்.

இரண்டாம் பிரிவு ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது மகாஜன அணி கோல் காப்பாளர் பத்மஜெபனின் ஆட்டம் சிறப்பாக இருந்தது அரவிந்தனும் திறமையாக ஆடினார் மூன்றும் பிரிவு ஆட்டத்தில் மகாஜன 2 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்தச் சுற்றுப்போட்டி வடபாதிலக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது வட்டாரக் கல்வியதிகாரி (உடற் பயிற்சிப் பிரிவு) திரு வி கணேசலிங்கத்தின் மேற்பார்வையில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன

(உ-68)

### உதைபந்தாட்டம்

## ஒஸ்மானியா வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ் கல்வித் திணைக்களம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி முதலாம் பிரிவு அணிக்கு இரண்டாவது வெற்றி கிடைத்துள்ளது.

இந்த அணி யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியை 6—1 என்ற கோல் அடிப்படையில் வென்றது

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது

இதற்கு முன்னர் நடைபெற்ற யாழ் மத்திய கல்லூரி அணிக்கெதிரான ஆட்டத்திலும் ஒஸ்மானியா அணி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது

(இ - 7)

## திம்பு---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ழர் அமைப்புகள் முன்வைத்த அடிப்படை அம்சங்களில் குடியியல் உரிமை ஒன்றைத் தவிர ஏனையவை அறவே மாகாண சபை யோசனைகளில் காணப்படவில்லை என்று போராளி அமைப்பு ஒன்றின் பேச்சாளர் சொன்னதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பேச்சு நடத்த விருப்பம்?

இதற்கிடையில் போராளி அமைப்புகளில் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்தைத்தவிர ஏனைய அமைப்புகள் இந்தியாவின் வலியுறுத்தலுக்கு இணங்கிப் பேச்சுகளை நடத்தக்கூடிய வாய்ப்பு இருப்பதாகச் சென்னை தமிழர் வட்டாரங்களை ஆதாரம் காட்டி ஏ எப் பி செய்தி ஸ்தாபனம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

(அ - எ - 2)

## வடக்கும்- - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் தலைவர்கள் விவரம் வருமாறு:

1 தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்:
திரு. வி. பிரபாகரன்
திரு. திலகர்

2 தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்:
திரு. உமாமகேஸ்வரன்

3. ஈழப்புரட்சி அமைப்பு:
திரு. பாலகுமார்
திரு சங்கர்

4. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி:
திரு பத்மநாபா
திரு எல். கேதீஸ்வரன்

5. தமிழ் ஈழ விடுதலை இயக்கம்:
திரு. செல்வம் (அ-2)

## பிலிப்பீன்ஸில் .....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

தமது அரசின் அமைச்சரவையையும் அவர் அறிவித்திருக்கிறார்.

மேற்படி ஹோட்டல் ஜனாதிபதி கொரஸின் அக்கினோவுக்கு ஆதரவான அரச படைகளினால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறது.(உ: 2)

## தூதுவர். ..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டுள்ள இந்திய மீனவர்—

கடந்த சனிக்கிழமை கரை ஒதுங்கிய 6 இந்திய மீனவர்களின் சடலங்கள்—

மீன்பிடிப் படகு ஒன்றில் கரை ஒதுங்கிய 5 இந்திய மீனவர்கள்—

ஆகிய விடயங்கள் சம்பந்தமாக இந்திய அதிகாரிகள் அடங்கிய கோஷ்டி ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதா என்பது சம்பந்தமாக இலங்கை வெளியுறவு அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்த பின்னரே இந்தியத் தூதரகம் தீர்மானிக்கும் என்றும் தெரியவந்தது

(உ-எ)


The Centre Of The City
"WHERE ELSE"
On Saturday and Snnday
BEER GARDEN NIGHT
A/C or NON A/C ROOMS
RANGING FROM RS. 50/- to RS. 200/-
CHINESE MEALS
RANGING FROM RS. 25 - to RS. 40/-
ALSO
COOL DRINKS,
HOT DRINKS
SHORTEATS & LUNCH
இவற்றுடன் உங்கள் உடலுக்கும் உள்ளத்திற்கும் புதிய தெம்பை அளிக்க காலை 9-30 மணி முதல் இரவு 11-30 வரை சேவை செய்யக் காத்திருக்கிறது
ஹோட்டல்
ஞானம்ஸ்
299. மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



பாதுகாப்பான சூழலில் ரெலிபோன் பேச "ரெலிகுளோப்"
ஆர். ஜி. கட்டிடம். ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 25088 - 6 தொடர்புகள்.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி இரண்டாவது ஒழுங்கை 16 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 07-07-1986.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 16 Second Lane, Power House Road, JAFFNA Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number Q J 60 N 86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org